தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009



# ஆனந்த பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com






சென்னை மலர்: 01 இதழ்: 140 15.11.2025 சனிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 140 Saturday pages 4 Rs.5/-


## இன்றைய நாள்

சனிக்கிழமை
(15–11–2025)
விசுவாவசு ஆண்டு, ஐப்பசி–29

பிறை: தேய்பிறை
திதி
ஏகாதசி நாளை விடியற்காலை 5.39 வரை பிறகு துவாதசி.
நட்சத்திரம்:
உத்திரம் பின்னிரவு 3.07 வரை பிறகு அஸ்தம்.
யோகம்
மரணயோகம்
ராகுகாலம்
காலை 9.00–10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி.
சூலம் –கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 5–6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | உறுதி |
| மிதுனம் | திடம் |
| கடகம் | திறமை |
| சிம்மம் | சிறப்பு |
| கன்னி | தனம் |
| துலாம் | வெற்றி |
| விருச்சிகம் | இன்பம் |
| தனுசு | நிறைவு |
| மகரம் | ஜெயம் |
| கும்பம் | நேர்மை |
| மீனம் | ஈகை |

# பிகாரில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கிறது தேசிய ஜனநாயகக் கூட்டணி!

**பாட்னா,நவ.15:**

பிகார் சட்டப்பேரவைத் தேர்தலில் ஜனதா தளம் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 190 இடங்களில் முன்னிலை பெற்று வெற்றியை உறுதி செய்திருக்கிறது.

இதன் மூலம் பாஜக மற்றும் ஜனதா தளம் இணைந்து பிகாரில் மீண்டும் ஆட்சியமைக்கும் என்பது தெளிவாகிறது.

243 தொகுதிகளைக் கொண்ட பிகார் சட்டப்பேரவைக்கு, 122 தொகுதிகளில் பெரும்பான்மை பெற வேண்டிய நிலையில், ஐக்கிய ஜனதா தளம், பாஜக மற்றும் இதர கட்சிகளின் கூட்டணி இணைந்து 190 தொகுதிகளில் முன்னிலை வகித்து, பிகாரில் மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியைப் பிடிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பாஜக மட்டும் 85க்கும் மேற்பட்ட தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.



பிகாரில் நடந்த பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை முதல் எண்ணப்பட்டு வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியாகி வருகின்றன. வாக்கு எண்ணிக்கைத் தொடங்கியது முதலே தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்னிலையில் உள்ளது. முற்பகல் 12 மணி நிலவரப்படி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஜனதா தளம் 73 தொகுதிகளிலும், பாஜக 84 தொகுதிகளிலும் இதர கட்சிகள் 31 தொகுதிகளிலும் முன்னிலை பெற்று சுமார் 188 தொகுதிகளில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றன.

மகாகத்பந்தன் கூட்டணியில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் 36 தொகுதிகளிலும் காங்கிரஸ் 6 தொகுதிகளிலும் இதர கட்சிகள் 9 தொகுதிகளிலும் முன்னிலைப் பெற்று ஒட்டுமொத்தமாக 51 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.எனவே, பிகாரில், மீண்டும் பாஜக - ஜனதா தளம் கூட்டணி தலைமையிலான ஆட்சியமையப் போகிறது என்பது முன்னிலை நிலவரங்கள் மூலமாகவே அறியப்படுகிறது.

**2020 - 2025 தேர்தல் முடிவுகள் ஒரு ஒப்பீடு!**

கடந்த 2020ஆம் ஆண்டு தேர்தலைக் காட்டிலும் இந்த பிகார் தேர்தல் தேஜ கூட்டணிக்கு மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கிறது என்றே கூறப்படுகிறது. அதாவது, 2020 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்த தேஜ கூட்டணி 37.26 சதவிகித வாக்குகளை மட்டும்தான் பெற்றிருந்தது. எதிர்க்கட்சி வரிசையில் அமர வைக்கப்பட்ட மகாகத்பந்தன் கூட்டணியோ 37.23 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தது.

ஆட்சியமைத்த கட்சியும் எதிர்க்கட்சியும் பெற்றிருந்த வாக்கு வித்தியாசத்தை பார்த்த எவர் ஒருவருக்கும் மிகப்பெரிய ஆச்சரியம் காத்திருக்கும். அதாவது 0.03 சதவீத வாக்குகள் அதிகம் பெற்றிருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியமைத்தது.

அது மட்டுமல்லாமல் பிகாரில் கடந்த 2020 தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்கள் பெரும்பாலும் 12 ஆயிரம் வாக்குகளுக்கும் குறைவான வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றிருந்தனர். குறைவான வாக்குகளில் வெற்றி பெற்றாலும் வெற்றி வெற்றிதானே என்று கேட்கலாம். ஆனால் அந்த வெற்றியிலும், அதாவது தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிகமாக பெற்ற தொகுதிகள் எவ்வளவு தெரியுமா? வெறும் 15 தொகுதிகள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.ஆனால், 2025 பேரவைத் தேர்தலில் 12 மணி நிலவரப்படி, பாஜக - ஜனதா தளம் தலைமையிலான கூட்டணி பெற்றிருக்கும் ஒட்டுமொத்த வாக்குகள் 46.18 சதவிகிதம். ஆனால் 35.28 சதவிகித வாக்குகளைத்தான் மகாகத்பந்தன் கூட்டணி பெற்றுள்ளது.2025 சட்டப்பேரவைத் தேர்தலில், இரு கூட்டணியும் பெற்றிருக்கும் வாக்கு விகிதம் பெரிய அளவில் மாறியிருக்கிறது. இது வாக்கு எண்ணிக்கை முடிவில் முழுமையாக வெளியாகும் என்பதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

12.30 மணி நிலவரப்படி, பாஜக 21.32 சதவிகித வாக்குகளையும் ஜனதா தளம் 18.92 சதவிகித வாக்குகளையும் பெற்றுள்ளன. ராஷ்ட்ரிய ஜனதா தளம் 23.11 சதவிகித வாக்குகளைப் பெற்று, அதிக வாக்குகளைப் பிடித்திருக்கும் கட்சிகளின் வரிசையில் முதலிடத்தில் உள்ளது.

# உக்ரைன் தலைநகர் கீவ் மீது இரவு முழுவதும் ரஷியா ஏவுகணை தாக்குதல்

**ரஷ்யா,நவ.15:**

உக்ரைன் மீது கடந்த 2022-ம் ஆண்டு ரஷியா தாக்குதலை தொடங்கியது. போர் தொடங்கி 4 ஆண்டுகள் ஆன போதும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்த போரை நிறுத்த அமெரிக்க அதிபர் டிரம்ப் இரு தரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனாலும் இதற்கு எந்த பலனும் கிடைக்கவில்லை. ரஷியாவும், உக்ரைனும் ஒருவருக்கொருவர் மாறி, மாறி தாக்கி வருகின்றனர்.



ரஷியா நடத்திய தாக்குதலில் உக்ரைனில் உள்ள பல நகரங்கள் கடுமையான சேதமடைந்து உள்ளது. ஏராளமான கட்டிடங்கள் எலும்பு கூடுகள் போல காட்சி அளிக்கிறது. ரஷியாவுக்குள் புகுந்து உக்ரைன் படையினர் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி நடவடிக்கையில் ரஷியா இறங்கி இருக்கிறது.

இந்த நிலையில் சமீப காலமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் உக்ரைன் மீது ரஷிய படைகள் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நேற்று இரவு முதல் இன்று காலை வரை உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷியா வான்வெளி தாக்குதலில் ஈடுபட்டது. இடைவிடாமல் ஏவுகணைகள், டிரோன் களை வீசியது.

உள்கட்டமைப்பு வசதிகள், குடியிருப்பு கட்டிடங்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் கூறி உள்ளது. இரவு முழுவதும் குண்டு மழை பொழிந்தது.

கீவ் சர்வதேச விமான நிலையம் அருகே டெஸ்னியான்ஸ்கி பகுதியில் உள்ள 5 மாடி கட்டிடமும் ஏவுகணை தாக்குதலுக்கு தப்பவில்லை. அந்த கட்டிடம் தீப்பிடித்து எரிந்தது. மேலும், பல கட்டிடங்கள் சேதம் அடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. உள்கட்டமைப்புகள் தாக்குலுக்கு ஆளானதால் மின்சாரம் மற்றும் குடிநீர் வினியோகம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ரஷியாவின் இந்த தாக்குதலில் கர்ப்பிணி பெண் உள்பட 11 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. ரஷியா தாக்குலால் கீவ் நகர மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

# பெரியமேட்டில் சார் பதிவாளர் அலுவலகத்தை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**சென்னை,நவ.15:**



சென்னை பெரியமேட்டில் பதிவுத்துறை சார்பில் ரூ.3.86 கோடியில் கட்டப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.


இதையடுத்து கொளத்தூர் தொகுதியில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ரூ.5.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அவர் திறந்து வைத்தார்.

நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம், முழு நேர நூலகம், ஐ.ஏ.எஸ். பயிற்சி கூடம் உள்ளிட்டவற்றையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதைத்தொடர்ந்து கொளத்தூர் பெரியார் அரசு மருத்துவமனை வளாகம் அருகே கட்டப்பட உள்ள பெரவள்ளூர் புறக்காவல் நிலையம் கட்டுமானப் பணிக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

கொளத்தூரில் கட்டப்படும் ரத்த சுத்திகரிப்பு, மறுவாழ்வு மைய கட்டுமான பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஜவஹர்லால் நேரு பிறந்தநாள்: நினைவிடத்தில் சோனியா காந்தி மலர்தூவி மரியாதை



**புதுதில்லி,நவ.15:**

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேருவின் பிறந்தநாள் நேற்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி டெல்லியில் உள்ள நேருவின் நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு முக்கிய தலைவர்கள் மரியாதை செலுத்தி வருகின்றனர்.

அந்த வகையில், நேருவின் நினைவிடத்தில் இன்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மலர்களை தூவி மரியாதை செலுத்தினார்.

மேலும், காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜூன கார்கேவும் நேருவின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அவர்களுடன், மாநிலங்களவை துணை தலைவர் கிரண் ரிஜ்ஜூ, கே.சி.வேணுகோபால் உள்பட பலர் நேருவின் நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்தினர்.

# இன்று பள்ளிகளுக்கு விடுமுறை

**புதுசேரி,நவ.15:**

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெறுவதால் புதுச்சேரியில் இன்று (15.11.25) பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே விடப்பட்ட விடுமுறையை ஈடுகட்டும் வகையில் நாளை பள்ளிகள் இயங்கும் என அறிவிக்கப்பட்டிருந்து.

டெட் தேர்வு காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை விடப்படுவதாக புதுச்சேரி பள்ளிக்கல்வித் துறை அறிவித்துள்ளது.

இன்றைய விடுமுறையை ஈடுசெய்ய அடுத்த ஆண்டு ஜன.3ம் தேதி வேலைநாளாக செயல்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

# திமுகவில் இணைந்த மைத்ரேயனுக்கு கட்சிப் பதவி!

**சென்னை,நவ.15:**



திமுகவில் இணைந்த அதிமுக முன்னாள் எம்பி மைத்ரேயனுக்கு கட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் முன்னிலையில் அதிமுக முன்னாள் எம்பி மைத்ரேயன் கடந்த ஆகஸ்ட் மாதம் திமுகவில் இணைந்தார்.

இந்த நிலையில், அவரை திமுக கல்வியாளர் அணியின் துணைத் தலைவராக நியமித்து கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

அதிமுக சார்பில் 2002 முதல் மூன்று முறை மாநிலங்களவை உறுப்பினராக பதவி வகித்தவர் மைத்ரேயன். அந்த கட்சியின் அமைப்புச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற மாநிலங்களவை தேர்தலில் அதிமுக சார்பில் மீண்டும் மாநிலங்களவை உறுப்பினர் பதவி கிடைக்கும் என மைத்ரேயன் எதிர்பார்த்த நிலையில், அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS


| | |
|---|---|
| Public Notice | Loss of Share |
| Legal Notice | Merger |
| Tender Notice | Acquisition |
| Society Notice | AFR, UFR, etc. |

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com


# காற்று மாசுபாட்டால் கேள்விக்குறியான தில்லி குழந்தைகள் உடல்நிலை!

**புதுதில்லி,நவ.15:**

தில்லியில் நாளுக்குநாள் காற்றின் தரம் மோசமாகி வரும்நிலையில், தில்லி குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையும்மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறது.



உலகின் மிகவும் மாசுபட்ட 15 நகரங்களில் 10 நகரங்கள் இந்தியாவில்தான் உள்ளன. தில்லியில் காற்றின் தரம் மோசமாகி வருவதால், ஜென் ஆல்ஃபா குழந்தைகளுக்கு வரும் காலங்களில் முன்கூட்டிய இறப்பு, எளிதில் நோய்ப்படுதல், கற்றல் திறனின்மை பாதிப்புகள் ஏற்படும் அபாயங்கள் உள்ளன.தில்லியில் சமீபத்திய ஆண்டுகளாகவே காற்றின் தரம் மோசமானதாக இருப்பதாகக் கூறப்பட்டாலும், 5 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த குழந்தையே இதுவரையில் சுமார் 800 நாள்கள் வரையில் மோசமான காற்றை சுவாசித்து வந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது. காற்று மாசுபாட்டால், இந்தியாவில் மட்டும் ஓராண்டில் ஒரு லட்சம் குழந்தைகள் உயிரிழக்கின்றனர்.

மாசுபட்ட காற்றால்,குழந்தைகள் நினைவுத் திறன், கற்றல் திறன், கவனமும் பாதிக்கப்படுவதாக அமெரிக்காவில்மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. குழந்தைகளிடையே ஆஸ்துமா, மூச்சுக்குழாய் அழற்சி, நிமோனியா பாதிப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

தில்லி பள்ளிகளில் பாதிக்கும் மேற்பட்ட மாணவர்கள், காலை பிரார்த்தனைகளை இருமலுடன் தொடங்குவது பெருந்துயரம்.




# இளையான்குடி சிவன் கோவிலில் மகாதேவ அஷ்டமி விழா மலர் பந்தலிட்டு பக்தர்கள் வழிபாடு



**சிவகங்கை, நவ.15:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் உள்ள சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்டஅருள்மிகு ஸ்ரீ ஞானாம்பிகை சமேத இராஜேந்திர சோழீஸ்வரர் கோவில் மகாகும்பாபிஷேகம் கடந்த 3 ந்தேதி நடைபெற்றது. இக்கோவிலில் பைரவர் தனி சன்னதியில் காட்சி தருகிறார்.

கும்பாபிஷேகம் கண்ட இந்த சிவன் கோவிலில் முதல் விழாவாக ஐப்பசி மாத தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு மகாதேவ அஷ்டமி விழா வெகு சிறப்புடன் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு சிறப்பு பைரவர் யாகம் நடைபெற்று ஏழு மணிக்கு அருள்மிகு காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன.

பின்பு பூப்பந்தலில் சிறப்பு மலர் அலங்காரத்தில் கால பைரவருக்கு சிறப்பு தீபாராதனைகள் காட்டப்பட்டு மகாதேவ அஷ்டமி விழா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை பைரவர் கமிட்டி மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.

# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஐப்பசி பூரம் ஏற்றி இறக்குதல் வைபவம்



**மதுரை, நவ.15:** விருந்து உண்டு போகைக்கு நாயேன் சடலத்தை வெம்கழுகும், பருந்தும் சுழலு முன்னே வருவாய் - மணப்பந்தலிலே திருந்தும் கரம் பற்றி நிற்பார் திருமுகச்செவ்வி எல்லாம் அருந்தும் கயல் விழியாய்! மதுராபுரி அம்பிகையே! மதுராபுரி அம்பிகை மாலை- குலசேகர பாண்டியன். சொக்கே நின் தாளே துணை

# காட்பாடியில் 72 வது கூட்டுறவு வார விழா!



**வேலூர்,நவ.15:** வேலூர்காட்பாடிரங்காலயா திருமண மண்டபத்தில் கூட்டுறவுத்துறை வேலூர் மாவட்டம் சார்பில் மாவட்ட அளவிலான 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா-2025 மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்ட திமுக செயலாளர் மற்றும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இதில் வேலூர் தொகுதி எம்பி கதிர் ஆனந்த், வேலூர் தொகுதி எம்எல்ஏ கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில் குமார், திமுக மாவட்ட அவை தலைவர் முகமது சகி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மதுரை வழியாக நவ. 18 முதல் ராமேசுவரம் திருப்பதி இடையே கூடுதல் சிறப்பு ரயில்



**மானாமதுரை, நவ. 15:** ராமேசுவரம் - திருப்பதி இடையே வருகிற 18-ஆம் தேதி முதல் கூடுதலாகசிறப்புரயில் இயக் கப்படும் என்ற ரயில்வே நிர் வாகத்தின் அறிவிப்பால் பொதுமக்களும் பயணிக ளும் மகிழ்ச்சியடைந்னர்.

ராமேசுவரம் - திருப்பதி ராமேசுவரம் இடையே தற்போது திருப்பதி எக்ஸ்பி ரஸ் ரயில் வாரத்தில் மூன்றுநாட்கள் இயக்கப்பட்டு வரு கிறது. இந்த ரயில் ராமேசுவ ரத்திலிருந்து ஞாயிறு, வியா ழன், வெள்ளி ஆகிய தினங் களில் மாலை 4.30க்கு புறப்பட்டு மானாமதுரை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், விழுப்புரம், திரு வண்ணாமலை, காட்பாடி வழியாக மறுநாள் காலை 10.10க்கு திருப்பதி சென்ற டைகிறது.

மறு மார்க்கத்தில் திருப் பதியிலிருந்து திங்கள், வெள்ளி, சனி ஆகிய தினங் களில் முற்பகல் 11.55-க்கு புறப்பட்டு மறுநாள் அதி க காலை 4.45-க்கு இதே வழித் தடத்தில் பயணித்து ராமேசு வரம் சென்றடைகிறது. இந்தரயில்களால்ராமநா தபுரம், சிவகங்கை, மதுரை, திருச்சி உள்ளிட்ட மாவட் டங்களைச் சேர்ந்த மக்கள் திருப்பதிக்குச் சென்றுவர பயனுள்ளதாக உள்ளது. இந்த ரயிலை இரு மார்க் கங்களிலும் தினசரி ரயி லாக இயக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தப் பட்டு வந்த நிலையில், ராமேசுவரம்- திருப்பதி - ராமேசு வரம் இடையே கூடுதலாக சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்தது.


இதன்படி, இந்த ரயில் ராமேசுவரத்திலிருந்து வரு கிற 18-ஆம் தேதியும், திருப் பதியிலிருந்து வருகிற 19-ஆம் தேதியும் இயக்கப்ப டவுள்ளது. டிச. 31-ஆம் தேதி வரை இந்த சிறப்பு ர யி ல் இயக்கப்படும்.

ராமேசுவரத்திலிருந்து ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை மாலை 4.30-க்கு புறப்பட்டு மறுநாள் காலை 10.10-க்கு திருப்பதி சென்றடையும். மறு மார்க்கத்தில் புதன்கிழ மைதோறும் திருப்பதியிலி ருந்து முற்பகல் 11.55-க்கு புறப்பட்டு மறுநாள் அதி காலை 4.45-க்கு ராமேசுவ ரம் சென்றடையும்.

ஏற்கெனவே ராமேசுவரம்- திருப்பதி - ராமேசுவ ரம் இடையே இயக்கப்படும் திருப்பதி எக்ஸ்பிரஸ் ரயில்களின் வழித்தடங்களிலேயே இந்த சிறப்பு ரயிலும் இயங் கும் என ரயில்வே நிர்வாகம் தெரிவித்தது. ரயில்வே நிர் வாகத்தின் இந்த அறிவிப் பால் சிவகங்கை, ராம நாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொது மக்கள் மகிழ்ச்சிய டைந்தனர்.

# மதுரை கீழடி டெம்பிள் சிட்டி ஹோட்டலில் சாப்பிட வந்த நடிகர் ஜெயராம்





**மதுரை, நவ 15:** மதுரையில் உயர் தரமான சைவ உணவு வகைகள் வழங்கும் மதுரை மாட்டுத்தாவணி டெம்பிள் சிட்டி ஹோட்டல் நிர்வாகி சுப்புராமன் மதுரையில் பல கிளைகள் நடத்தி வருகிறார்.

இதில் கடந்த செப்டம்பர் மாதம் மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் கீழடியில்திறக்கப்பட்டு சுற்றுலா பயணிகளிடம் பெரிதும் வரவேற்பைப் பெற்ற கீழடி சிலைமான் பாலம் முன்பு உள்ள டெம்பிள் சிட்டி ஹோட்டலில் மலையாளம் மற்றும் தமிழ் தெலுங்கு படங்களில் முக்கிய வேடங்களில் நடிக்கும் நடிகர் ஜெயராம் டெம்பிள் சிட்டி ஹோட்டலில் உணவருந்தினார்.

அனைத்து சைவ உணவு சுவையாக உள்ளது என ஹோட்டல் ஊழியர்களிடம் மகிச்சியுடன் தெரிவித்து போட்டோ எடுத்துகொண்டார்.

ராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகள் யாத்திரிகர்கள் மகிழ்ச்சியுடன் உணவு சாப்பிட்டு செல்ல ஆரோக்கியமான உயர் தரமான சுவையான சைவஉணவு வகைகள் உடனுக்குடன் தயார் செய்து சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்படுகிறது.

மிகப்பெரிய பார்கிங் வசதி கொண்ட ஹோட்டலாக மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் கீழடியில் உள்ள டெம்பிள் சிட்டி ஹோட்டல் உள்ளது என உரிமையாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

# வை.இராமராஜ பாண்டியன் குறளினி எழுதிய "அவள் அவளாக" நூலை வெளியீட்டு விழா



**மதுரை, நவ.15:** மதுரை மேலக்கோபுர வீதியில் உள்ள நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தில் தேசிய புத்தகக் கண்காட்சி திறப்புவிழா முன்னிட்டு பத்து புதிய நூல்கள் வெளியிட்டனர்.பேராசிரியர் வை.இராமராஜ பாண்டியன் குறளினி எழுதிய "அவள் அவளாக" நூலை வெளியிட தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவி பெற்றுக்கொண்டார்.உடன் உயர்நீதிமன்றம் வழக்கறிஞர் கு. சாமிதுரை,தமிழ்ச்செம்மல் கருப்பதேவன்.

# பள்ளி மாணவர்களுக்கான சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி





**திருவண்ணாமலை, நவ.15:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட சமூக நலத்துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கான சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் பள்ளி உதவித்தலைமை ஆசிரியர் கேசவன் வரவேற்புரை யாற்றினார் நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் முனைவர் மு. பிரசன்னா அவர்கள் தலைமை வகித்தார் . சட்ட ஆலோசனைகளை வழக்கறிஞர் இன்பரசி அவர்கள் விளக்கி பேசினார். 1098,1930 சாலை விழிப்புணர்வு மற்றும் வாகன விபத்து குறித்து பேசினார். நலத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர் முடிவில் வேளாண்மை ஆசிரியர் ஜெயக்குமார் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# புனரமைக்கப்பட்ட அம்மன் தேர் மாட வீதி உலா



**திருவண்ணாமலை, நவ.15:** அண்ணாமலையார் கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு புனரமைக்கப்பட்ட அம்மன் தேர் அண்ணாமலையார் ராஜகோபுரம் முன்பு பூஜையுடன் தொடங்கி மாட வீதி சுற்றி வந்தது. ஏராளமான பெண்கள் தேர் வடம் பிடித்து இழுத்தார்கள் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.

காவல்துறை, அரசு அதிகாரிகள், தீயணைப்புத்துறை அலுவலர்கள், மின்சார வாரியம் , மருத்துவத்துறை, அறநிலை துறை அலுவலர்கள் அனைவரும் பாதுகாப்புக்காக தேருடன் சுற்றி வந்தார்கள்.

ஏராளமான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு தேர் வடம் பிடித்து இழுத்து வேண்டி அருள் பெற்றனர். வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# ஜவஹர்லால் நேரு திரு உருவப் படம்



மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு ஜவஹர்லால் நேரு திரு உருவப் படத்தை கல்வியாளர் எம் சின்னப்பா வனத்துறை ஓய்வு அவர்கள் பொறுப்பு தலைமை ஆசிரியர் மு.சீனிவாசன் அவர்களிடம் வழங்கிய நிகழ்வு உடன் ஆசிரியர்கள் தேன்மொழி மாலதி சரண்ராஜ் மற்றும் பிரதீபா.

# "நேரு பிறந்த நாள் விழா"




**சென்னை, நவ.15:** ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் தலைமையில் நடிகர் மீசை மனோகரன், நடிகர் அப்பா பாலாஜி, நடிகர் மீசை அழகப்பன், எழுத்தாளர் விவேக் ராஜ், நடிகர் முக்கூருணி, மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா, குழந்தை நட்சத்திரம் லியானா இணைந்து நேரு அவர்கள உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அனைவருக்கும் இனிப்புகள், தேநீர் வழங்கப்பட்டது.

# பொது அறிவிப்பு

பழைய எண் 67 புதிய எண் 27 புச்சம்மாள் தெரு
புது வண்ணாரப்பேட்டை சென்னை 600081
இந்த விலாசத்தில் உள்ள சொத்து
திரு. **நரசிம்மா நாயுடு மனைவி**
**என். திருப்பம்மாள்**
அவர்களுடைய சொத்து ஆகும்.
இந்த சொத்திற்கு வாரிசுதாரர்கள் மூவர்கள்
அதில் ஆண்கள் இருவர்கள். பெண் ஒருவர்.
இந்த சொத்தினை வாங்கவோ விற்கவோ
அடகு வைக்கவோ
மூவர்கள் கையெழுத்து அவசியம்.
அத்துமீறி இந்த சொத்தினை வாங்கினால்
சட்டப்படி குற்றமாகும்.

## குடியாத்தம் டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு எஸ். பி., பாராட்டி பரிசு வழங்கி கௌரவிப்பு!



போதை மாத்திரைகள் சப்ளை செய்த முக்கிய மொத்த வியாபாரியை கைது செய்த குடியாத்தம் டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ருக்மாங்கதனுக்கு பாராட்டி பரிசு வழங்கப்பட்டது. குடியாத்தம் பகுதியில் இளைஞர்களுக்கு போதை மாத்திரைகளை சப்ளை செய்த ராஜஸ்தான் மாநிலம், ஜெய்பூர் பகுதியைச் சேர்ந்த மொத்த மருந்து வியாபாரி பிரதாப் சவுத்ரியை ராஜஸ்தான் சென்று கைது செய்த குடியாத்தம் டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ருக்மாங்கதனை பாராட்டி வேலூர் மாவட்ட எஸ்பி மயில்வாகனன் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

## மானாமதுரையில் பசுமை வலியுறுத்தி மாரத்தான் போட்டி 16 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது




மானாமதுரை, நவ.15: கிரின் ஹாட் ஃபுல்னெஸ் ரன் இந்தியா முழுவதும் 125 மையங்களில் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில் 15 மையங்களில் நடைபெற உள்ளது இதில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஹார்ட்ஃபுல்னெஸ் தியான அமைப்பும் செர்டு தொண்டு நிறுவனமும் இணைந்து வரும் 16 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு மானாமதுரை யூனியன் அலுவலகத்திருந்து மாரத்தானை சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் பொற்கொடி கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்கள். அதனைத் தொடர்ந்து போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசளிக்க மானாமதுரை காவல் துணை கண்காணிப்பாளர் .பார்த்திபன் மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி ஹார்ட் ஃபுல் னெஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் குமார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன் மாவட்ட தொடர்பு ஒருங்கிணைப்பாளர் தமிழன்பன் வருகிறார்கள்.

இந்நிகழ்வில் மானாமதுரை முழுவதும் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இது பற்றி மானாமதுரை ராம்சந்ர மிஷன் இலவச தியான ஆலோசனை மைய பொறுப்பாளர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது எங்களின் நோக்கம் கிரீன் ஹார்ட்ஃபுல்னெஸ் ரன் என்பது உடல் ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழல் மேம்பாட்டையும் அழகாக ஒருங்கிணைக்கும் ஒரு சிறப்பு முயற்சி ஆகும். நிலைத்தன்மை, வளம், சகிப்புத்தன்மை, எங்கள் பசுமை நோக்கை மேலும் விரிவுபடுத்தும் வகையில் 50,000 மரங்கள் நடும் பெரும் இலக்குடன் நிகழ்ச்சி நடைபெறுகிறது. என தெரிவித்தார்.

மானாமதுரை யூனியன் ஆபீஸ் முன்பு மாராத்தான் தொடங்கி முடியக்கூடிய இடம் ஹார்ட் ஃபுல்நெஸ் தியான மையம், பீசர் பட்டினத்தில் நிறைவு பெறுகிறது. மொத்த தூரம்: 5 கி.மீ. ஓட்டம் நடைபெறுகிறது.

## சென்னையில் இன்று மின் தடை

சென்னை, நவ.15: சென்னையில் 15.11.2025 அன்று காலை 09:00 மணி முதல் மதியம் 5:00 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ்காணும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும்.

மதியம் 2:00 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

திருமுல்லைவாயல்: லட்சுமிபுரம், பெரியார் நகர், கோனிமேடு, கங்கை நகர், சரத்கண்டிகை, பம்மத்துக்குளம், எல்லம்மன் பேட்டை, எரான்குப்பம்.

பொன்னேரி: மகேந்திரா சிட்டி, வெள்ளோடை, எலியம்பேடு கிராமம், வைரவன்குப்பம், எக்கில்மேடு.






## இராமனுத்து அரசு ஆரம்பப்பள்ளியில் பள்ளியில் குழந்தைகள் தினக் கொண்டாட்டம்



இராமனுத்து அரசு ஆரம்பப்பள்ளியில் பள்ளியில் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. குழந்தைகள் மீது அன்பும் அக்கறையும் செலுத்திய ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளினை குழந்தைகள் தினமாகப் பள்ளி கல்லூரிகளில் கொண்டாடப்பட்டு வருகிறது. குழந்தைகள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பையும் எதிர்கால சிந்தனைகளையும் புகுத்துவதோடு மட்டுமின்றி அவர்களின் நலன் குறித்த விழிப்புணர்வு தினமாக அமைய வேண்டுமென பள்ளித் தலைமையாசிரியர் மு.க.இப்ராஹிம் மாணவர்களுக்கு எடுத்துக்கூறினார்.குழந்தைகளுக்குப் பரிசுகள் மற்றும் இனிப்புகளை பள்ளி இடைநிலை ஆசிரியர் கோ.இந்திரா வழங்கினார்.

## தண்டலை நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா கொண்டாட்டம்





புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா மேனாள் ஊராட்சி மன்ற தலைவர் விஜயன் தலைமையில் நடைபெற்றது பள்ளி மேலாண்மை குழு தலைவர் உஷாராணி கல்வியாளர் சின்னப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர் பொறுப்பு தலைமை ஆசிரியர் மு.சீனிவாசன் அனைவரையும் வரவேற்று குழந்தைகள் தின விழா நிகழ்ச்சி வாழ்த்துரை வழங்கினார் நிகழ்ச்சியில் மாணவர்களது பேச்சு, கட்டுரை, ஓவியம் மற்றும் அறிவியல் கண்காட்சி வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் பிரதீபா, சரவண பாண்டியன் ,செந்தில், நாகராஜன், செல்வநாதன் மற்றும் பெற்றோர்கள் ஆசிரியர்கள் தேன்மொழி சரண்ராஜ் கலந்து கொண்டனர்

## குழந்தைகள் தின விழா கொண்டாட்டம்..!



பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாள் குழந்தைகள் தினமாக சணமுககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கொண்டாடப்பட்டது.

மாணவர்கள் ஸ்ரீ ஹர்ஷன் மற்றும் ஷரன் முருகன் நேருவாக வேடமிட்டு வந்தனர். தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் "குழந்தைகளை நேசித்த நேரு" என்ற தலைப்பில் பேசினார். மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

மாணவர்கள் சிறிய வெடிகள் வெடித்தும், பலூன் ஊதி உடைத்தும் மகிழ்ந்தனர்.



மாணவர்களுக்கு இனிப்பாக லட்டு வழங்கப்பட்டது. மாணவர்கள் மனம் மகிழும் விழாவாக குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. விழா ஏற்பாடுகளை தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் செய்திருந்தார்.

## பேக்கிடெர்ம்டேல்ஸின் மூத்த எழுத்தாளர்களுக்கு விருது வழங்கும் விழா



சென்னை, நவ.15: பேக்கிடெர்ம்டேல்ஸின் மூத்த எழுத்தாளர்களுக்கு விருது வழங்கும் விழா பேக்கிடெர்ம்டேல்ஸின்கௌரவ பிரதிநிதி ரோட்டரியன் AKS Dr. K. ஸ்ரீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

300 க்கும் மேற்பட்ட மூத்த எழுத்தாளர்களை உருவாக்கிய பேக்கிடெர்ம்டேல்ஸ் எழுத்தாளர்களுக்கு கனடா, யு.கே, மற்றும் யு.எஸ் போன்ற நாடுகளில் செயல்பட்டு வரும் யுகியோதோ பதிப்பக நிறுவனம் , சியோனஸ் எனும் விருதை வழங்கி கௌரவிக்கிறது. இந்த நிகழ்வு நவம்பர் 13, அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னையில் நடைபெற்றது. யுகியோதோ நிறுவனத்தின் நிறுவனர் அர்ஜுன் சௌத்ரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த விழா ஏற்பாடுகளை செய்த பேக்கிடெர்ம்டேல்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் முனைவர்.லஷ்மி ப்ரியா, தமிழ் பிரிவு தலைவர் உமா அபர்ணா, பேக்கிடெர்ம்டேல்ஸின் மக்கள் தொடர்பு அதிகாரி உஷா கண்ணன், பேக்கிடெர்ம்டேல்ஸின் பள்ளி தொடர்பு அதிகாரி வனஜா முத்துக்கிருஷ்ணன், வெளியூரில் இருந்து கொண்டே தன்னால் இயன்ற உதவிகளை செய்த பேக்கிடெர்ம்டேல்ஸின் நிகழ்வு அதிகாரி ருக்மணி வெங்கட்ராமன், பேக்கிடெர்ம்டேல்ஸின் குழுஉறுப்பினர் ராதா அஸ்வின் எழுத்தாளர்கள் கீதா வீரரா கவன் பானு நாச்சியார், பிருந்தா, கமலா கிருஷ்ணமூர்த்தி , பிரபாவதி விஜயலஷ்மி குமரகுரு ஆகியோர் சிறப்புற பணி செய்தனர்.



## தினம் ஒரு குறள்


**அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை**
**ஒழுக்க மிலான்கண் உயர்வு.** - குறள் 135

లోభికెంత యున్న లాభమ్ము లేనట్లు
వైకిరాడు దుష్పవర్త నుండు -కురల్ 135

**धन की ज्यों ईर्ष्यालु के, होती नहीं समृद्धि ।**
**आचारहीन की नहीं, कुलीनता की वृद्धि ॥** - कुराल 135

Azhukkaa Rutaiyaankan Aakkampondru Illai
Ozhukka Milaankan Uyarvu - Kural 135

## செங்கல்பட்டு ஆத்தூர் வழித்துணை பணீஸ்வரர் கோவிலில் கோ பூஜை



செங்கல்பட்டு, நவ.15: செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூர் கிராமத்தில் கர்ப்பரட்சாம்பிகை சமேத வழித்துணை பணீஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ளது. 3500 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் சிவபெருமான் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

புத்திர பாக்கியம் வேண்டுவோர் மற்றும் திருமணம் கைகூடாமல் கவலைப்படுவோருக்கு சிறந்த பரிகார தலமாகவும், குரு ஸ்தலமாகவும் இந்த தலம் விளங்குகிறது.

இங்கு சுவாமியின் திருவருளால் நித்திய பூஜைக்கு கங்கை தீர்தத்தால் அபிஷேகம் நடைபெறுகிறது. இத்தீர்த்தத்தை உட்கொண்டால் வியாதிகள் குணமடையும் என்பது நம்பிக்கை.

இக்கோவிலில் வாரம்தோறும் வெள்ளிக் கிழமை காலையில் கோ பூஜை நடைபெறும். அவ்வகையில் வெள்ளிக்கிழமையான இன்று காலை 6.00 மணியளவில் கோ பூஜை நடைபெற்றது.

முன்னதாக சுவாமி மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

## நித்தியானந்தா ஆசிரமத்தில் இருந்து சீடர்களை வெளியேற்றக்கூடாது

### மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை, , நவ.15: நித்தியானந்த தியான பீடத்தின் அறங்காவலர் சந்திரசேகரன், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:-

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே தனிநபருக்கு சொந்தமான இடத்தில் உள்ள நித்தியானந்தா ஆசிரமத்தில் தங்கி உள்ள சீடர்களை வெளியேற்ற வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவு பிறப்பித்து உள்ளார்.

இதன் அடிப்படையில் ராஜபாளையம் போலீசார், ஆசிரமரத்தில் உள்ள சீடர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இது தொடர்பான வழக்கு கோர்ட்டில் நிலுவையில் உள்ளது.

எனவே யாரையும் வெளியேற்றக்கூடாது. மேலும் முறையாக விசாரிக்காமல் வருவாய் அதிகாரி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை ஏற்கனவே ஐகோர்ட்டு, நித்தியானந்தா தலைமறைவு குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் இந்தியாவில் இல்லை. எனவே நித்யானந்தா தொடர்பான வழக்கை எப்படி விசாரிக்க முடியும்? என கேள்வி எழுப்பி இருந்தது.

பின்னர் நித்தியானந்தாவின் ஆசிரமத்தில் உள்ள அவரது பக்தர்களை வெளியேற்ற இடைக்கால தடை விதிக்கப்பட்டது. ஏற்கனவே இந்த மனு மீதான விசாரணை முடிக்கப்பட்டு தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதி விக்டோரியா கவுரி நேற்று பிறப்பித்தார். அப்போது சம்பந்தப்பட்ட ஆசிரமத்தில் இருந்து நித்தியானந்தாவின் சீடர்களை வெளியேற்றுவது தொடர்பான மாவட்ட வருவாய் அதிகாரி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது என

# கவிதை அரங்கம்!



மருத்துவத்தில் மறதி
நோயாகிறது மனித
மனதிற்கோ மறதி
மருந்தாகிறது

நேசிக்க யாருமில்லாத
போது நம்மை யோசிக்க
வைக்கிறது இந்த
வாழ்க்கை

குறைகள் காணும்
உலகில் நிறைகள்
தெரிவதில்லை

எல்லா மானிடருக்களுக்கு
பின்னாலும் மறைக்கப்பட்ட
கதையும் மறுக்கப்பட்ட
கதையும் இருந்து
கொண்டு தான் இருக்கிறது


ஒருவரின் சின்ன சின்ன
மாற்றங்கள் மனக்கசப்பை
தந்தாலும் அவர்களை
புரிந்து கொள்ள ஒரு
வாய்ப்பினை தந்துவிடுகிறது

தவறும் சரியாகத் தெரியும்
அதை உணராத வரையில்
உணர்ந்தும் தன்னோடே
இருக்கும் அதை
திருத்தாத வரையில்

கெட்டவன் சாகும்
போது தான்
கஷ்டப்படுவான்
நல்லவன் சாகுற
வரைக்கும்
கஷ்டப்படுவான்

இவ்வுலகில் உள்ள
ஒவ்வொருவரும்
நல்லவர்கள் தான்
பிறக்கும் போது

## மிகப் பெரிய பலம்.....



உங்கள் உள்ளத்தில் இருக்கும் வலிமை எந்த சவாலையும் கடக்கத் தக்கது.

தடைகள் வந்தாலும், அவை உங்கள் முன்னேற்றத்தை நிறுத்த முடியாது...

நீங்கள் நிதானமாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் முன்னேற்றமே.

நீங்கள் சிறிய சாதனைகளை செய்து கொண்டு இருக்கிறீர்கள் — அவை உங்கள் முயற்சியின் வெற்றி.

உங்கள் வழியில் வரும் வாய்ப்புகளை தவற விடாதீர்கள்...

அந்த ஒவ்வொரு வாய்ப்பும் உங்களை உங்கள் இலக்குகளுக்கு அருகே அழைத்துச் செல்கின்றன.

உங்கள் தாங்கும் ஆற்றல் தான் உங்கள் மிகப் பெரிய பலம்.

அது உண்மை தானே?
வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# கானகத்தின் ரகசியம்



சுந்தரம் தன்னுடைய சிறு குடிசையின் வாசலில் அமர்ந்திருந்தார். அவர் கண்கள், மரங்களுக்கு நடுவே வளைந்து செல்லும் காவிரிக் கிளை நதியின் பால் நிலைத்திருந்தன. அந்த நீர், இரவின் குளிர்ச்சியில் நடுக்கம் கொண்ட ஒரு குழந்தையின் உடலைப் போல், அசைவற்று இருந்தது.

சுந்தரத்தின் இதயம் கனத்திருந்தது. நகரத்தில் வசிக்கும் அவர் மகள், அவரை வந்து தன்னுடன் அழைத்துச் செல்லப் போவதாய் கடிதம் அனுப்பியிருந்தாள். இந்த வனத்தையும், தன் வாழ்நாள் முழுவதும் பேசிப் பழகிய மரங்களையும், காற்றில் நிரந்தரமாய் இருக்கும் மூலிகைகளின் வாசனையையும் விட்டுப் பிரிவதா? வருத்தம் ஒரு மெல்லிய கயிறு போல அவருடைய நெஞ்சைச் சுற்றியது.

காலை நேரம் நெருங்க நெருங்க, கானகம் உயிர்பெற்றது. தூரத்தில் கேட்கும் மலையருவியின் இரைச்சல் ஒரு தாளத்தைப் போல ஒலிக்க, அடர்ந்த மரங்களின் இலைகளூடே கதிரவனின் தங்க நிறக் கதிர்கள் பூமியைத் தொட்டன. அந்த ஒளி, தரையில் விழுந்த பனித்துளிகளை வைரக் கற்களைப் போல் ஜொலிக்க வைத்தது.

இதுதான் “சுந்தரத்தின் கோவில்”.

அவர் தனது குடிசையைச் சுற்றிப் பார்த்தார். சுவரில் தொங்கும், தானாகவே செதுக்கிய மரப் பொம்மைகள். ஜன்னலருகே பதிக்கப்பட்டிருக்கும், அவருக்குத் தேவையான வெளிச்சத்தைத் தரும் சிறிய கண்ணாடித் துண்டுகள். ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும். இந்த எளிய வாழ்க்கை அவருக்கு அளித்த திருப்தி, உலகிலுள்ள எந்தப் பொக்கிஷத்திலும் இல்லை.

"நகரம்... அங்கே எனக்கு என்ன வேலை? சத்தம், புகை, ஓட்டம்," என்று தனக்குள்ளேயே முணுமுணுத்தார். நகரத்தின் மீதான வெறுப்பு ஒரு கணமே வந்து போனது. ஆனால், மகள்... அவள் பாசம், அவளது அழைப்பு. அவர் கண்களின் ஓரத்தில் ஈரம் கசிந்தது. பாசம் ஒரு சுடுநீரைப் போலக் கன்னத்தில் இறங்கியது.

இல்லை... நான் செல்ல வேண்டியதில்லை.

அவர் மகளின் கடிதத்தை எடுத்தார். அதில் உள்ள அன்பைக் கண்டார். ஆனால், அந்த அன்பை ஏற்க, தான் யார் என்பதை இழக்க வேண்டியதில்லை.

அவர் சிரித்தார். ஒரு நீண்ட, அமைதியான சிரிப்பு. இப்போது அவரது உணர்வு, தீர்மானமான தெளிவு.

மகள் வரும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்க, சுந்தரம் குடிசை வாசலில் நின்றார். அவர் கையில், அவர் சமீபத்தில் செதுக்கிய ஒரு சிறு மரப் பொம்மை இருந்தது மயிலின் வடிவில்
அவர் குடிசையை விட்டு வெளியேறவில்லை.

சிறிது நேரத்தில், நகரத்தின் கார் சத்தம் மெல்லக் கேட்டது. மகள் காரிலிருந்து இறங்கி ஓடி வந்தாள். அவள் முகத்தில் ஆச்சரியம்.

"அப்பா! பெட்டியை எடுத்து வைக்கவில்லையா?"

சுந்தரம் புன்னகையுடன் அந்த மர மயிலை அவளிடம் நீட்டினார்.

"இதைப் பார், என் செல்லமே. இதுதான் என்னுடைய பெட்டி. இதை விட சிறந்த இடம் உன்னால் எனக்குத் தர முடியுமா? நான் உன்னுடன் வரமாட்டேன். ஆனால், நீ விரும்பினால், உனக்கு அமைதி தேவைப்படும்போதெல்லாம், இந்த வனத்தின் அழகை உனக்குக் காட்ட நான் எப்போதும் தயாராக இருப்பேன்," என்றார் பாசத்துடன்.

மகள் அவர் கண்களில் இருந்த உண்மையான மகிழ்ச்சியைக் கண்டாள். அவள் தலையசைத்து, தன் தந்தையின் முடிவை ஏற்றுக்கொண்டாள். அவளும் அங்கேயே அமர்ந்து, மெல்ல வீசும் காற்றையும், ஓசையிடும் இலைகளின் சத்தத்தையும் கேட்கத் தொடங்கினாள்.

டாக்டர் ப.பாண்டியராஜன்
மதுராந்தகம்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல ‘ஐ லவ் யூ’ சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"*

*கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"*



# தினம் ஒரு சமையல்



## முட்டை குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| வேக வைத்த முட்டை | -4 |
| சின்ன வெங்காயம் | -1 கப் |
| தக்காளி பழம் | -3 |
| கெட்டி தயிர் | -1/4 கப் |
| ஆயில் | -1 குழி கரண்டி |
| மிளகாய் தூள் மஞ்சள் தூள் மல்லித்தூள், உப்பு- | தேவைக்கேற்ப |
| கரம் மசாலா தூள் | -1/2டீ ஸ்பூன் |
| ஜிஞ்சர் கார்லிக் பேஸ்ட் | -1டீ ஸ்பூன் |
| தேங்காய் பேஸ்ட் | -2 டேபிள்ஸ்பூன் |
| கொத்தமல்லி | |

செய்முறை:


வேகவைத்த முட்டையை நடுவில் சிறிய கீறல்கள் போட்டுக் கொள்ளுங்கள். அப்போதுதான் முட்டையில் மசாலா நன்றாக போய் சேரும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் சூடான பின் வெங்காயத்தை அரைத்து இந்த விழுதை சேர்த்து வதக்கி கொள்ளுங்கள். இதோடு இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்க வேண்டும் கூடவே முட்டைகளை சேர்த்துக் கொள்ளுங்கள்.



வதங்கி வந்தபின் மிளகாய் தூள் மல்லித்தூள் மஞ்சள் தூள் கூடவே கரம் மசாலாத்தூள் இதோடு கொஞ்சம் தயிர் ஊற்றி வதக்கவும்.

பச்சை வாசனை போன பின் கடைசியில் தக்காளி பேஸ்ட் மற்றும் தேங்காய் பேஸ்ட்டை சேர்த்து கொஞ்சமாக தண்ணீர் விட்டு தேவைக்கு ஏற்ப உப்பு மஞ்சள் தூள் சேர்த்து கொதி வந்ததும் கொத்தமல்லி இலைகளை தூவி பரிமாறலாம்.

## சாருண்ணை நன்மைகள்



சாருண்ணை இது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், எலும்பு ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், இதய நலனைப் பாதுகாக்கவும் உதவுகிறது. இதில் புரதம், ஆரோக்கியமான கொழுப்புகள், இரும்புச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ் போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளன. மேலும், இது சரும ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும்.

சாருண்ணை நன்மைகள்:

நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தும்: சாருண்ணை ஒரு ஆக்ஸிஜனேற்றியாக செயல்பட்டு நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்த உதவுகிறது.

எலும்பு ஆரோக்கியத்தை மேம்படுத்தும்: இதில் உள்ள கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் எலும்புகள் மற்றும் பற்களை வலுவாக வைத்திருக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கும்: சாருண்ணை, நல்ல நிறைவுறா கொழுப்பு அமிலங்கள் உட்பட ஆரோக்கியமான கொழுப்புகளைக் கொண்டுள்ளது, இது இதய ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும்.

சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தும்: இதில் உள்ள ஆக்ஸிஜனேற்ற பண்புகள் சருமத்திற்கும் நன்மை பயக்கும்.

இரத்த சிவப்பணுக்களின் உற்பத்திக்கு உதவும்: இரும்புச்சத்து ஹீமோகுளோபின் உருவாக்க உதவுவதால், இரத்தத்தில் ஆக்ஸிஜன் கொண்டு செல்வதை மேம்படுத்தி ஒட்டுமொத்த உயிர்ச்சக்தியை அதிகரிக்கிறது.

திசு வளர்ச்சிக்கு உதவும்: இது தாவர அடிப்படையிலான புரதத்தின் நல்ல மூலமாகும். புரதச்சத்து திசுக்களை சரிசெய்யவும், ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவுகிறது.

ஆற்றல் வழங்கும்: மிதமான அளவு கார்போஹைட்ரேட்டைக் கொண்டிருப்பதால் உடலுக்கு ஆற்றலை வழங்குகிறது.

இரும்புச்சத்தை உறிஞ்ச உதவும்: தாவர அடிப்படையிலான உணவுகளில் இருந்து இரும்புச்சத்து உறிஞ்சுவதற்கு இது உதவுகிறது.

# நான் கைதாகவில்லை, நடந்தது இதுதான்.. பிக் பாஸ் தினேஷ் உண்மையை விளக்கி வெளியிட்ட வீடியோ

சீரியல் நடிகர் தினேஷ் தமிழ் சின்னத்திரையில் முக்கிய நடிகர்களில் ஒருவர். அவர் பிரபல நடிகை ரச்சிதாவை காதல் திருமணம் செய்த நிலையில் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்துவிட்டனர்.

பிக் பாஸ் வீட்டுக்குள் செல்லும்போது தான் ரச்சிதாவுடன் மீண்டும் சேர விருப்பப்படுவதாக தினேஷ் கூறினார். ஆனால் ரச்சிதா அதற்கு வாய்ப்பே இல்லை என கூறி விவாகரத்து வழக்கை தொடர்ந்து நடத்தினார்.

இந்நிலையில் நடிகர் தினேஷ் நெல்லையில் பெண் ஒருவருக்கு அரசு வேலை வாங்கி தருவதாக 3 லட்சம் பணம் வாங்கி ஏமாற்றிவிட்டதாக போலீசில் புகார் அளிக்கப்பட்டு இருக்கிறது.

அந்த வழக்கில் தினேஷ் நேற்று கைதாகிவிட்டதாக செய்தி பரவியது.

இந்நிலையில் தற்போது தினேஷ் தான் கைதாகவில்லை என வீடியோ வெளியிட்டு விளக்கம் கொடுத்து இருக்கிறார்.

தன் மீது பொய் வழக்கு போடப்பட்டு இருக்கிறது எனவும், போலீஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக தான் அழைத்து சென்றார்கள் என கூறி இருக்கும் தினேஷ், “நான் தவறு செய்யவில்லை என ஆதாரத்துடன் விளக்கம் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்” என கூறி இருக்கிறார்.



சினிமா



சேலையில் பார்வதி நாயர் இருக்கும் ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதோ,

# தனது மனைவி பிறந்தநாளுக்கு கியூட் பதிவு போட்ட சிவகார்த்திகேயன்... போட்டோவுடன் இதோ

கடுமையாக உழைத்தால் கண்டிப்பாக முன்னேற முடியும் என காட்டும் அளவிற்கு சினிமாவில் நிறைய பிரபலங்கள் உள்ளார்கள்.

அதில் ஒருவர் தான் நடிகர் சிவகார்த்திகேயன், எந்த ஒரு சினிமா பின்னணியும் இல்லாமல் தனது திறமையை வெளிக்காட்டி சின்னத்திரையில் நுழைந்து படிப்படியாக முன்னேறி இப்போது டாப் நாயகனாக வளர்ந்து இருக்கிறார்.

கடைசியாக இவரது நடிப்பில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் மதராஸி திரைப்படம் வெளியானது, ஆனால் சரியான வரவேற்பு பெறவில்லை.அடுத்து சிவகார்த்திகேயன் நடிப்பில் சுதா கொங்கரா இயக்கியுள்ள பராசக்தி திரைப்படம் வெளியாகவுள்ளது.

மனைவி, மகள், மகன்கள் யார் பிறந்தநாள் என்றாலும் கியூட்டான போட்டோ வெளியிட்டு வாழ்த்து கூறுவார் சிவகார்த்திகேயன். அப்படி இன்று அவர் தனது மனைவி ஆர்த்திக்கு அழகான போட்டோவுடன் பிறந்தநாள் வாழ்த்து கூறியுள்ளார்.



Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com